| |  |  |  |
|---|---|---|---|
| | டி ஏ பி | யூரியா | பொட்டாஷ் |
| அடியுரம் | 50 | 16 | 20 |
| முதல் மேலுரம் | - | 35 | 20 |
| இரண்டாம் மேலுரம் | - | 35 | - |

**இலை வழியாக ஊட்டச்சத்து அளித்தல்**

பருத்தி செடி பூ பூத்து காய் காய்க்கும் தருணத்தில் இலைத் தெளிப்பாக 19-19-19 என்- பி-கே உரத்தை ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ என்ற அளவில் (10 கிராம் 19-19-19 என்- பி- கே உரம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு என்ற விகிதத்தில்) அளிப்பதன் மூலம் பருத்தி மகசூலை அதிகரிக்கலாம். இவ்வாறு0 10-15 நாட்கள் இடைவெளியில் இரண்டு அல்லது மூன்று முறை தெளிக்கலாம்.

இதே போல் பருத்தி காய்கள் திரட்சியடையும் பருவத்தில் மல்டி கே உரம் (ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ என்ற அளவில் அதாவது 10 கிராம் மல்டி கே உரம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு என்ற விகிதத்தில்) மற்றும் போரான் ஊட்டசத்து உரத்தை (ஒரு ஏக்கருக்கு 100 கிராம் என்ற அளவில் அதாவது 1 கிராம் போரான் ஊட்டசத்து உரம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு என்ற விகிதத்தில்) இரு முறை (10-15 நாட்கள் இடைவெளியில்) தெளிப்பதன் மூலம் நல்ல மகசூல் பெறலாம்.

**நுண்ணூட்டச் சத்து உரமிடல்**

நுண்ணூட்டச் சத்து குறைபாடுடைய நிலங்களில் பருத்தி விதைக்கும் பொழுது ஒரு ஏக்கருக்கு 5 கிலோ நுண்ணூட்டச் சத்து கலவையை 20 கிலோ மணல் அல்லது நன்கு மக்கிய தொழு உரத்துடன் கலந்து விதைச் சாலின் அருகில் தூவ வேண்டும். பருத்தி செடி பூ பூத்து காய் பிடிக்கும் தருணத்தில் நுண்ணூட்டச் சத்து குறைபாடு அறிகுறிகள் தென்பட்டால் இலை வழி தெளிப்பாக ஏக்கருக்கு 2 கிலோ என்ற அளவில் நீரில் கரையும் தன்மையுடைய நுண்ணூட்டச் சத்து கலவையை நீரில் கரைத்து இலைகள் மீது நன்கு படும்படி தெளிக்க வேண்டும்.

நிதி உதவி : மத்திய அரசின் SCSP திட்டம் (2022-2023)

மேலும் விபரங்களுக்கு : முனைவர் ஏ. ஹெச். பிரகாஷ், திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் தலைவர்,
இ.வே.ஆ.க. - மத்திய பருத்தி ஆராய்ச்சி நிறுவனம், மண்டல நிலையம், கோயம்புத்தூர் - 641 003
தொலைபேசி - 0422 2430045, www.cicr.org.in

வெளியீடு : ஒய். ஜி. பிரசாத், இயக்குநர், மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையம், நாக்பூர் - 440 010

(மார்ச் 2023)

ICAR-CICR/Folder/2023/1

# மிக நீண்ட இழை பருத்தியில் இரசாயன உர மேலாண்மை





இரா. ராஜா
க. சங்கர் கணேஷ்
கு. ரமேஷ்
அ. சம்பத்குமார்
ச. மாணிக்கம்
ஏ. ஹெச். பிரகாஷ்
ஒய். ஜி. பிரசாத்

இ.வே.ஆ.க. - மத்திய பருத்தி ஆராய்ச்சி நிறுவனம்
மண்டல நிலையம், மருதமலை சாலை
கோயம்புத்தூர் - 641 003

# மிக நீண்ட இழை பருத்தியில் இரசாயன உர மேலாண்மை

பொதுவாக இரசாயன உரங்களை மண் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையிலோ அல்லது மண் வள அட்டையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள அளவிலோ இட வேண்டும். இல்லையெனில் மிக நீண்ட இழை பருத்தி இரகங்களுக்கு ஒரு ஏக்கருக்கு பொதுவில் பரிந்துரைக்கப்படும் அளவான 70 கிலோ யூரியா, 100 கிலோ சூப்பர் (சிங்கிள் சூப்பர் பாஸ்பேட்) மற்றும் 30 கிலோ பொட்டாஷ்(மூரியேட் ஆப் பொட்டாஷ்) உரங்களை இட வேண்டும். இதில் 35 கிலோ யூரியா, 100 கிலோ சூப்பர் மற்றும் 15 கிலோ பொட்டாஷ் உரங்களை அடியுரமாகவும் மீதமுள்ள 35 கிலோ யூரியா மற்றும் 15 கிலோ பொட்டாஷ் உரங்களை மேலுரமாகவும் இடவேண்டும். பரிந்துரைக்கப்பட்ட அடியுரங்களை பருத்தி விதைக்கும் இடத்திலிருந்து 5 சென்டி மீட்டர் (2 இன்ச்) தூரத்தில் சிறிய கோடு கிழித்து அதில் பட்டையாக இட்டு மூடி விட வேண்டும். அடியுரம் இட முடியாத சூழலில் விதைத்த 20 - 25 நாட்களில் (வயலில் களைகள் இல்லாத நிலையில்) இடலாம். விதைத்த 40 - 45 நாட்களில் செடிகளுக்கு மண் அணைக்கும் பொழுது 35 கிலோ யூரியா மற்றும் 15 கிலோ பொட்டாஷ் உரங்களை மேலுரமாக இடவேண்டும்.

### ஒரு ஏக்கருக்கு இரகங்களுக்கான உர அளவு

| |  |  |  |
|---|---|---|---|
| | யூரியா | சூப்பர் | பொட்டாஷ் |
| அடியுரம் | 35 கிலோ | 100 கிலோ | 15 கிலோ |
| மேலுரம் | 35 கிலோ | - | 15 கிலோ |
| (அல்லது) | | | |

| |  |  |  |
|---|---|---|---|
| | டி ஏ பி | யூரியா | பொட்டாஷ் |
| அடியுரம் | 35 | 21 | 15 |
| மேலுரம் | - | 35 | 15 |

மிக நீண்ட இழை பருத்தி வீரிய ஒட்டு இரகங்களுக்கு ஒரு ஏக்கருக்கு பொதுவில் பரிந்துரைக்கப்படும் அளவான 105 கிலோ யூரியா, 150 கிலோ சிங்கிள் சூப்பர் பாஸ்பேட் மற்றும் 40 கிலோ பொட்டாஷ் உரங்களை இட வேண்டும். இதில் 35 கிலோ யூரியா, 150 கிலோ சூப்பர் மற்றும் 20 கிலோ பொட்டாஷ் உரங்களை அடியுரமாக இடவேண்டும். விதைத்த 40-45 நாட்களில் செடிகளுக்கு மண் அணைக்கும் பொழுது 35 கிலோ யூரியா மற்றும் 20 கிலோ பொட்டாஷ் உரங்களை முதல் மேலுரமாகவும் மீதமுள்ள 35 கிலோ யூரியாவை இரண்டாம் மேலுரமாக விதைத்த 60-ஆவது நாளிலும் இட வேண்டும்.

### ஒரு ஏக்கருக்கு வீரிய ஒட்டு இரகங்களுக்கான உர அளவு

| |  |  |  |
|---|---|---|---|
| | யூரியா | சூப்பர் | பொட்டாஷ் |
| அடியுரம் | 35 கிலோ | 150 கிலோ | 20 கிலோ |
| முதல் மேலுரம் | 35 கிலோ | - | 20 கிலோ |
| இரண்டாம் மேலுரம் | 35 கிலோ | - | - |
| (அல்லது) | | | |